உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானனக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதயம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதுடன், தொடர்ந்தியங்கும் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் நிதியம் செயற்பட்டிருந்தது என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணக்கமின்மை

	உரிய நியமத்துடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07 இன் படி சேதப்படுத்தும் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது என உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட விவரக் குறிப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,354,421,556 தொகைக்கான தனிப்பட்ட மீதிகளின் கடன் சேதப்படுத்தலுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த விவரக்	ரூபா 10 மில்லியனை விட மிகையான தனிப்பட்ட கடன்மீதிகளின் சேதப்படுத்தும் சதவீதம் 67.76 சதவீதமென முகாமைத்துவத்தினால் ஆணையாளர் சபை பத்திர இலக்கம் BP/OTH/47/2025 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தனிப்பட்ட கடன்களை மீண்டும் அறவீடு செய்வதற்காக	கணக்கீட்டு நியமங்களில் விதிக்கப்பட்டுள்ளவாறு சேதப்படுத்தும் நட்டத்தை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட விவரக் குறிப்புக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

	குறிப்புக்கள் எவை என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.	காணப்படுகின்ற இயலுமை மற்றும் எவ்வளவு காலம் எடுக்குமென கவனம் செலுத்தி இந்த சதவீதம் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.	
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் பிரகாரம் பிரதான முகாமைத்துவ தொகுதியினர் வேதனம் நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கலின் கீழ் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் பணிப்பாளருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,476,950 இற்கான நலன்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.	இணங்குகின்றேன். இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் படி செயற்படுவேன்.	பிரதான முகாமைத்துவ தொகுதியினரின் வேதனங்கள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வெலிகம நகர சபையின் கடன் தவணைகளை சரியாக கணிக்காமையால் அதற்குரிய 2010 ஆண்டு முதல் நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 11,665,308 இற்கான கடன்வட்டி சரியாக கணக்கீடு செய்திருக்கவில்லை.	ரூபா 11,665,308 இற்கான கடன்வட்டி நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையை ஏற்றுக் கொள்கின்றேன். இந்த தொகையை அறவீடு செய்வதற்காக தற்போது சபையுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	குறிப்பிட்ட கடன்வட்டி ஏடுகளில் சரியாக காட்டப்பட வேண்டியதுடன் தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஒக்தோபர் 01 திகதி முதல் 2025 செப்தெம்பர் 30 திகதி வரை காலப்பகுதி அடங்கக் கூடியவாறு ரூபா 2,041,561 இற்கான ஊழியர் உயிர்க் காப்புறுதி தவணைக்காக 2025 ஜனவரி 10 திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான ரூபா 510,390 இற்கான காப்புறுதிச் செலவு அட்டுறுச் செலவுகள் கணக்கீடு செய்திருக்கவில்லை.	இந்த கணக்காய்வுப் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காப்புறுதி கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த தொகை, அட்டுறு செலவென காட்டப்படவில்லை என்பதாகும்.	அட்டுறு அடிப்படையில் குறிப்பிட்ட செலவுகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	அகல்விரிவான வருமானக் கூற்றின் படி மீளாய்வாண்டிற்கான சேதனப்படுத்தல் நட்டம் ரூபா 64,720,996 தொகையென காட்டப்பட்டிருந்த போதிலும், வருமான வரி கணியின் போது சேதப்படுத்தல் நட்டமென ரூபா 66,391,129 தொகை என பயன்படுத்தப்பட்டிருந்தமையால்	சேதப்படுத்தல் வருமான வரி கணிப்பின் போதும் சேதப்படுத்தல் நட்டமென ரூபா 66,391,129 தொகை தவறுதலாக பதிவு செய்யப்பட்டது என்பதற்கு இணங்கின்றேன்.	வருமான வரி சரியாக கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

	மீளாய்வாண்டிற்கான வருமான வரி ரூபா 501,040 தொகை குறைவாகக் கணிக்கப்பட்டிருந்தது.		
(ஈ)	பிற்போடப்பட்ட வரி கணிக்கும் போது ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக வரி அடிப்படை என ரூபா 3,692,574 தொகை குறைவாக கையாளப்பட்டிருந்தமையால் வரிப் பொறுப்புக்கள் ரூபா 670,247 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.	சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக வரி அடிப்படை எமது கணிப்பின் படி ரூபா 7,961,205 ஆகும்.	-மேற்படி-
(உ)	வரிக் கணிப்பின் போது இடமளிக்கக் கூடிய முன்னைய ஆண்டுகளின் போது கணிக்கப்பட்டிருந்த வரி நட்டம் ரூபா 28,523,417 தொகைக்கு பதிலாக வரிக்காக சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட இலாபம் ஆகிய ரூபா 120,953,238 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 27,728,946 தொகை குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. முன்கொண்டு வரப்பட்ட ரூபா 92,429,821 இற்கான வரி நட்டத்திற்காக ரூபா 27,728,946 இற்கான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் கணிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 ஆண்டிற்காக வரி நட்டமொன்று காணப்படாமையால் பிற்போடப்பட்ட வரி சொத்தொன்று இணங்கான முடியவில்லை.	சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன்.	-மேற்படி-
(ஊ)	நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளில் மீளாய்வாண்டிற்கான வரிச் செலவு ரூபா 25,118,889 தொகை எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், அகல்விரிவான வருமானக் கூற்றில் வரிச் செலவு ரூபா 35,862,193 தொகை என காட்டப்பட்டிருந்தது. அதே போல் நிதி நிலைமைக் கூற்றில் மீளாய்வாண்டிற்கான வரி பொறுப்புக்கள் என ரூபா 40,692,797 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய அட்டவணைகளில் வரிப் பொறுப்புக்கள் என ரூபா 61,670,684 தொகை காட்டப்பட்டிருந்தது.	சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றேன்.	-மேற்படி-
(எ)	2023 ஆண்டின் போது பொது நிருவாக மாகாண சபைகள் மற்றும்	கணக்குகள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் வாகனத்தின்	வாகனத்தின் பெறுமதியை மதிப்பீடு பெறுமதி மதிப்பீடு

உள்ளூராட்சி அமைச்சிலிருந்து நிறுவனத்திற்கு கிடைத்திருந்த தற்போது பயன்படுத்தப்படுகின்ற வாகனத்தின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	பெறுமதி மதிப்பீடு செய்திருக்காமையால் குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டது. வாகனப் பெறுமதி மதிப்பீடு நிறுவனத்திற்கு சாட்டப்பட்டுள்ளதுடன் அந்த பெறுமதி மதிப்பீடு கிடைத்த பின்னர் கணக்குகளில் உட்படுத்தப்படும்.	செய்து ஏடுகளில் பதிவு செய்ய வேண்டும்.

1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	விடயம்	நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி ரூபா	நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி ரூபா	வித்தியாசம் ரூபா	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கடன் மற்றும் தொங்கல் வட்டி மீதிகள்	1,899,658,029	1,869,924,288	29,733,741	இணங்குகின்றேன். தனிப்பட்ட மீதிகள் மற்றும் கணக்குகள் இடையே வித்தியாசங்களுக்கான காரணத்தை கண்டறிவதற்காக வெளி திறன்தொழிலாளர் ஒருவருக்கு சாட்டப்பட்டுள்ளதுடன் அதன்படி இந்த வித்தியாசங்களை சீராக்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கின்றேன்.	பேரேட்டில் காட்டப்பட்டுள்ள தகவல்கள் அட்டவணைகளின் தகவல்களுடன் இணக்கஞ் செய்ய வேண்டும்.
(ஆ)	பெற வேண்டிய கடன் மீதிகள்	50,694,209	60,599,173 (மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களின் படி)	10,856,674	கடன் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் சமர்ப்பித்திருந் கெஸ்பேவ, நுவரகம்பலாத, கிழக்கு தலாவ, ஹிங்குரங்கொட மற்றும் ஹாலிஎல ஆகிய சபைகளின் கடன் பேரேட்டு மீதிகளுடன் இணங்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். அவற்றில் கெஸ்பேவ, நுவரகம்பலாத மற்றும் கிழக்கு தலாவ ஆகிய	கடன் பேரேட்டின் மீதிகளை உறுதிப்படுத்த வேண்டியதுடன் வித்தியாசங்கள் காணப்படின் கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும்.

சபைகளில் மீதிகளை மாற்றங்களுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் மீதியான சபைகளின் மீதிகளுக்கான வித்தியாசத்திற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு வருகின்றது. அதன்படி சரி செய்யவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது.

1.6 பெற வேண்டிய தொகை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கடன் மற்றும் முற்பணங்கள் அறவீடு செய்யும் போது 2018-2024 ஆண்டுகளுக்கான மிகையாக அறவிடப்பட்டிருந்த ரூபா 4,363,534 தொகை 2024 திசெம்பர் 31 திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2018 ஆண்டு முதல் கிடைத்திருந்த பணம், அறுதியாக இணங்காணாமல் முற்பணக் கணக்குகளின் பதிவு செய்யப்பட்டிருந்தது. முற்பணக் கணக்குகளில் காணப்படும் சில தொகைகள் உள்ளூராட்சி நிறுவனங்களினால் கடன் தொகையை தீர்த்த பின்னர் எமக்குக் கிடைத்திருந்த மிகைத் தொகையாகும். மேலும் 2025 ஆண்டிற்குரிய 2024 ஆண்டில் கிடைத்திருந்த தொகைகளும் இந்த கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த தொகை நாட்குறிப்பு மூலம் குறிப்பிட்ட கடன்பட்டோர் கணக்குகளுக்கு மாற்றுதல் மேற்கொள்ளப்படுகின்றது. 2025 ஆண்டிற்கு உரித்தில்லாத பணம் தற்போது இனங்கண்டுள்ளதுடன் குறிப்பிட்ட நாட்குறிப்பு பதிவுகள் மூலம் மாற்றுதல் அல்லது குறிப்பிட்ட பணம் உரிய உள்ளூராட்சி நிறுவனத்திற்கு திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	கடன்கள் மற்றும் முற்பணங்கள் அறவீடு செய்யும் போது மிகையாக கிடைத்த பணம் உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் இரண்டாம் தொகுதி அத்தியாயம் XLVIII பந்தி 29:1,2,3	நிறுவனத்தின் பணிப்பாளர் பதவியில் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தருக்கு 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது தாபனக் கோவையின் அத்தியாயம்	உங்களால் சுட்டிக் காட்டப்பட்ட தகவல்கள் சரியாக காணப்படுவதுடன் எமது நிறுவனத்தினால் கீழ்வரும் நடவடிக்கைகள்	தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறிப்பிட்ட தரப்பினருக்கு எதிராக

	VII பிரிவு 12:5:4 மற்றும் பிரிவு 12:8 இற்கு முரணாக 2008 ஜூலை 28 ஆந் திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடீ/50 இன் 5 ஆம் பந்தி மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ 1/2015 இல் அரச தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் பந்தி 3.7 இற்கு முரணாக கூட்டுத்தொகை ரூபா 1,244,905 தொகைக்கான படி செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய பின்னர் 2023 ஜூன் 02 ஆந் திகதி அவற்றில் ரூபா 901,556 தொகை அவரினால் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் முறையான ஒழுக்காற்கு விசாரணையொன்று இது வரை நடாத்தப்பட்டிருக்கவில்லை.	எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட பின்னர் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் பரிந்துரைகளாவன, அவ்வாறு மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனை திருப்பி அறவீடு செய்யும் படி பரிந்துரைக்கப்பட்டிருந்தது. 2023 ஜூன் 02 திகதி குறிப்பிட்ட கணக்காளர் ரூபா 901,550 இற்கான தொகையொன்று எமது நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 07 ஆந் திகதி அதற்கு தேவையான அனைத்து தகவல்களும் பொது நிருவாக அமைச்சின் ஊடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.	ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 98,403,591 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 57,579,949 தொகை ஆக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 40,823,642 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 53,786,332 தொகையினால் குறைவடைவதுடன் சேதப்படுத்தல் நட்டமும் ரூபா 102,840,683 தொகையினால் குறைவடைதல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு நடைபெற்ற கடன் வழங்கும் கடிதங்கள் வினியோகிக்கும் விழாவிற்காக ரூபா 1,385,984 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் செய்தித்தாள்களில் அறிவித்தல்	விழா நடைபெற்ற செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடுவதன் குறிக்கோள் இந்த கடன் உதவி பெற்றுக் கொள்ளும் நிறுவனங்கள் தவிர ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களை அறிவுருத்தி	ஆக்கபூர்வமான மற்றும் செயற்திறனுள்ள செலவு முகாமைத்துவம் செய்ய

வெளியிடுவதற்காக ரூபா 942,307 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 100 பேர் மாத்திரமே அதில் பங்குபற்றியிருந்தனர்.	உள்ளூராட்சி நிறுவனங்களின் மின்சார செலவுகளை குறைத்தல் மற்றும் தேசிய மட்டத்தில் முகங்கொடுத்துள்ள மின்சாரப் பிரச்சினைக்கு தீர்வொன்று வழங்குவதற்கான செயற்திட்டங்களுக்கு சலுகைக் கடன் வழங்குவதை ஊக்குவித்தல் மேலும் நிதியச் சுழல் நிதியம் விரிவாக்குவதற்கு சலுகை ஒன்று பெற்றுக் கொள்ளல் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, கொய்கா, ஜய்கா ஆகிய நிறுவனங்களை அழைத்து நிதி மற்றும் தொழிநுட்ப உதவிகள் எமது நிகழ்ச்சித் திட்டத்திற்கு பெற்றுக் கொள்ளும் எதிர்ப்பார்ப்பாகும். அதன்படி அந்த அனைத்து நிறுவனங்களுக்கும் எமது நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் ஆக்கபூர்வமான கருத்துக்கள் வழங்குவதற்காக இந்த விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.	வேண்டியதுடன் இவ்வாறான விழாக்களுக்காக பங்குபற்றலை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட ரூபா 176 மில்லியனுக்கான கடன் தொகையில் ரூபா 143 மில்லியன் தொகைக்கான கடன்வட்டியில் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்தது முறையே ரூபா 82 மில்லியன் தொகை மற்றும் ரூபா 57 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 860 மில்லியனுக்கான கடன்தொகையில் மற்றும் ரூபா 290 மில்லியனுக்கான கடன்வட்டித் தொகையில் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்தது முறையே ரூபா 367 மில்லியன் மற்றும் ரூபா 154 மில்லியன் தொகையாகும். அதன்படி கடன் மற்றும் வட்டி அறவீடு செய்வதன் முன்னேற்றம் 40 சதவீதம் முதல் 53 சதவீதத்திற்கு இடைப்பட்ட குறைந்த மட்டமாகக் காணப்பட்டது.	அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். ஏனைய செயற்திட்டங்களின் கடன் அறவீடு 2024 ஆண்டில் கூடிய பெறுமதியொன்றை காட்டிய போதிலும் LLDF-MC மற்றும் LLDF-UC செயற்திட்டங்களின் காணப்படுகின்ற குறைந்த கடன் அறவீட்டு மட்டம் காரணமாக ஒட்டுமொத்த கடன் அறவீட்டுப் பெறுமதி குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக கடன் அறவீடு நீண்டகாலமாக காணப்பட்ட சிக்கல் காரணமாக இந்த கடன் மற்றும் வட்டி அறவீடு செய்யும் சதவீதம் முறையே 43% மற்றும் 53% போன்ற குறைந்த பெறுமதியில் காணப்பட்டது. இந்த கடன்களை மீண்டும் அறவீடு செய்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்துள்ளமையால் எதிர்காலத்தில் இந்த பெறுமதிகள் மிகவும் சிறந்த மட்டத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.	ஆண்டிற்குரிய அறவீடு செய்யப்பட வேண்டிய கடன் மற்றும் வட்டித் தவணை உரிய முறையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆண்டில் நிறுவப்பட்டிருந்த ரூபா 2,938,000 தொகைக்கான நிதி முகாமைத்துவ, கடன் முகாமைத்துவ மற்றும் பொது மொடியூல் முறைமை மீளாய்வாண்டளவில் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டது,	சுட்டிக் காட்டியுள்ள விடயங்களுடன் இணங்குவதுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விஷேடத்துவர் ஒருவரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையின் பரிந்துரையின் படி இந்த மென்பொருள் முறைமையை முழுமையாக அகற்றி புதிய மென்பொருள் முறைமையொன்று அறிமுகப்படுத்தும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக 2022 திசெம்பர் 31 திகதியின் பின்னர் இந்த முறைமைக்காக பராமரிப்பு உடன்படிக்கைகளுக்கு அணுகி இருக்காததுடன் அதற்காக கொடுப்பனவு செய்யப்படவும் இல்லை. மேற்கூறிய அறிக்கையின் படி புதிய கணினி முறைமை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தேவைப்பாட்டிற்கு பொருத்தமான ஆக்கபூர்வமான மென்பொருள் முறைமையொன்று முறைப் பிரகாரம் கொள்வனவு செய்து பயன்படுத்த வேண்டும். இந்த முறைமை நிறுவியதன் மூலம் ஏற்பட்டிருந்த நட்டத்திற்கு பொறுப்பான ஆட்களை இனங்காண்பதற்கு உடனடியாக விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	நிதியத்தின் செயற்பாட்டு அலுவல்களை செயற்திறனாக்கும் குறிக்கோளுடன் கடந்த ஆண்டின் போது ரூபா 2,437,420 தொகை செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட கையடக்கத் தொலைபேசி உள்ளீடு மீளாய்வாண்டளவிலும் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது.	இந்த உள்ளீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது தற்போது காணப்படும் கணினி முறைமையுடன் செயற்படுத்துவதற்காகும். அறிமுகப்படுத்தியுள்ள கணினி முறைமையின் மூலம் முகாமைத்துவத்திற்கு தேவையான சரியான தரவுகள் கிடைக்கப் பெறாமை மற்றும் பொருந்தாமை அந்த முறைமை தற்போது முற்றாக செயற்படாமையால் இந்த கையடக்கத் தொலைபேசி உள்ளீட்டையும் பயன்படுத்த முடியாமல் உள்ளது. கணினி முறைமையை முழுமையாக அகற்றி புதிய கணினி முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தும் படி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்தின் கணினிகள் தொடர்பான விஷேடத்துவ விரிவுரையாளரிடம் அழைக்கப்பட்ட தொழிநுட்ப அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் இந்த கணினி முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு தற்போது கூறுவிலைகள் அழைக்கப்பட்டு தொழிநுட்ப மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு அமைச்சு டென்டர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-